மேலும், தி.மு.க. உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது இலவச மின்சாரத் திட்டத்தையே திரு. கருணாநிதி அவர்கள்தான் கொண்டு வந்தார் என்று இங்கே பேசினார். அதாவது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகின்ற திட்டத்தையே திரு. கருணாநிதி அவர்கள்தான் கொண்டு வந்ததாகப் பேசினார். அதுவும் தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த (மேசையைத் தட்டும் ஒலி) காலத்திலேயே சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்தான் வழங்கப்பட்டு வந்தது. அன்றைக்கு பெரிய விவசாயிகளுக்கு ஒரு சிறிய கட்டணம் வசூலிக்கப்பட்டது. திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 1991 ஆம் ஆண்டில் பெரிய விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசம் என்று அறிவித்தார். அதற்காகத்தான் 1992 ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பெரிய விவசாயிகளிடமிருந்து ஒரு ஆண்டுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 100 ரூபாய் என்று flat rate tariff வசூலிக்க வேண்டுமென்று ஒரு அரசாணையை வெளியிட்டோம், 1992ஆம் ஆண்டில். ஆனால் ஒரு மாதத்திற்குள்ளாகவே, அந்த அரசாணையையும் வாபஸ் பெற்றுவிட்டோம். ஆகவே, பெரிய விவசாயிகளிடமிருந்துகூட எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-04-2002) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

137. திரு. அ. பால்ராஜ், இ.ஆப., (ஓய்வு) அவர்களை, துணைத் தலைவராகவும் மற்றும் திரு. ஒ.எம். சந்திரசேகர் அவர்களை (தற்போதைய தலைமை நீதிபதி, பாண்டிச்சேரி), சென்னை, தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றத்தின் நீதித் துறை உறுப்பினராகவும்

2002 ஏப்ரல் 22]

நியமித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

138. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 16-7-2001 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

139. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

140. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

141. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2001-2002)

142. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

143. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2002)

144. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை. (2001-2002)

145. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை. (2001-2002)